காவிரி கயவாய்ப் பகுதியை நவீனப்படுத்துதல்.

*383 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் வினா எண். 73க்கு 11—8—1972 அன்று அளித்த விடையை யொட்டி தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவிரி டெல்டா பகுதியை நவீனப்படுத்தும் திட்டத்திற்கு உலக வங்கியிடமிருந்து கடன் பெறும் திட்டம் தற்போது எந்நிலையிலுள்ளது ?

(இ) அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) & (இ) தஞ்சை மாவட்டத்திலுள்ள காவிரி டெல்டா பகுதியை ரூ. 49 கோடி செலவில் புதுப்பிப்பதற்கான திட்ட அறிக்கை யொன்று தயாரிக்கப்பட்டு மத்திய நீர் மின் சக்தி ஆணைக் குழுவின் வாயிலாக உலக வங்கிக்கு அனுப்பப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு மத்திய அரசின் ஒப்புதல் எதிர் பார்க்கப்படுகின்றது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, உலக வங்கியிலிருந்து பெறும் இந்தக் கடன் தொகையிலிருந்து எந்த எந்த வகையில் நவீனப்படுத்தும் திட்டம் மேற்கொள்ள அரசு உத்தேசித்திருக்கிறது என்று அறியலாமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, நாம் அனுப்பிய திட்டத்தில் பழைய காவிரி கழிமுகப் பாசன ஏற்பாட்டைக் காலச் சார்புடன் புதுப்பித்தலுக்காக ரூ. 21·70 கோடி; காவிரி கழிமுகப் பாசன ஏற்பாட்டில் வடிகால் திட்டத்திற்கு ரூ. 6·80 கோடி; காவிரி கழிமுகப்பகுதியில் குழாய்க் கிணறுகளை இறக்கி நில நீர்வளத்தை மேம்படுத்துவதற்காக ரூ. 7·75 கோடி என்று அனுப்பியுள்ளோம்.

திரு. என். கே. பழனிசாமி: சார் ரூ. 40 கோடி இதற்குச் செலவாகும் என்று சொல்லப்பட்டது. உலக வங்கியிலிருந்து மாநில சர்க்கார் கேட்டது எவ்வளவு மத்திய சர்க்கார், அங்கிருந்து வாங்கக்கூடாது என்று நம்முடைய சர்க்காரிடம் சொல்லியிருக்கிறதா ? அப்படியென்றால், அதனுடைய விவரம் என்ன ?

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, ரூ. 40 கோடி அல்ல ரூ. 49 கோடி. திட்ட அறிக்கையை உலக வங்கிக்கு மத்திய நீர் மின்சக்தி ஆணைக் குழுவின் வாயிலாகத்தான் அனுப்பவேண்டும். நாம் அப்படித்தான் அனுப்பியிருக்கிறோம். இன்னும் அங்கிருந்து தகவல் இல்லை.